4. விதி 110-ன்கீழ் அறிக்கை

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு சிறப்பு நிதியுதவி ரூ.2,000/- வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிதான் தமிழ்நாட்டின் வளர்ச்சியாக இருக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு,*

> *'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்*
> *இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்'*
> *(மேசையைத் தட்டும் ஒலி)*

என்று கருதிய நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பயன் அனைத்து மக்களையும் சென்றடையும்வண்ணம் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தினார்கள்.

முற்பகல் 11-35

மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் உறுதியாக நடக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, ஏழையெளிய மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, அவர்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல பல்வேறு நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

பல மாவட்டங்களில் 'கஜா' புயலின் தாக்கத்தினாலும், பருவமழை பொய்த்ததன் காரணமாகவும், தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியினாலும் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு முழுவதும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் குறிப்பாக, விவசாயத் தொழிலாளர்கள், நகர்ப்புற ஏழை மக்கள், பட்டாசுத் தொழிலாளர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள், விசைத்தறித்

2019 பிப்ரவர் 11] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தொழிலாளர்கள், கைத்தறித் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மரம் ஏறும் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழிலாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த ஆண்டு தமிழ்நாடு அரசின் சிறப்பு நிதியுதவியாக தலா 2,000 ரூபாய் வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், கிராமப்புறத்தில் வாழும் சுமார் 35 இலட்சம் ஏழைக் குடும்பங்களும், நகர்ப்புறத்தில் வாழும் சுமார் 25 இலட்சம் ஏழைக் குடும்பங்களும் ஆக மொத்தம், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் சுமார் 60 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் தலா 2,000 ரூபாய் சிறப்பு நிதியுதவியைப் பெறுவர். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 1,200 கோடி ரூபாய் 2018-2019 ஆம் ஆண்டு (மேசையைத் தட்டும் ஒலி) துணை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிவிப்பு

“காகிதமில்லா சட்டமன்றம்” எனும் இலக்கினை எய்திடும் வகையில் உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியலில் சில விவரங்கள் உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சலில் அனுப்பப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. “காகிதமில்லா சட்டமன்றம்” என்னும் நிலையினை உருவாக்க, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, 2019 ஆம் ஆண்டிற்கான உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகளின் 8-வது பட்டியலுக்கான (1 முதல் 100 வரை) வினாக்களின் எண்கள் மற்றும் உறுப்பினர்களின் பெயர் ஆகிய விவரங்களை மட்டும் உள்ளடக்கிய அட்டவணைப் பட்டியல் தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் வடிவம்-software copy PDF வடிவில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல்மூலம் அனுப்பப்பட்டுள்ளன. இதன் அச்சிடப்பட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறாது என்பதைப் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உடுக்குறியிடாத